# சீர்காழி நகராட்சி



2022– ஆம் ஆண்டு **பிப்ரவரி** மாதம் 28 –ஆம் தேதிநாள்.28.02.2023 செவ்வாய் கிழமை மாலை 04.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணகூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி . ஆர். துர்க்கா பரமேஸ்வரி MBA.,
நகர்மன்ற தலைவர்,
சீர்காழி நகராட்சி.

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழிநகராட்சிக்குட்பட்ட 54 தாடாளன் கோவில்வட்டம் வார்டுபிளாக் 12 T.S.No 13/2 R.S.No 54/2 (17950 சதுரமீட்டர்) பரப்பளவுவீடுமனைப் பிரிவுஅமைக்க அனுமதி வேண்டி மனுதாரர் திரு K.சரண்ராஜ் ஸ்ரீநகர் காலனி, சீர்காழி விவசாய முகணி நிலப்பாட்டிலிருந்து குடியிருப்பு பகுதியாக நிலம் பயன்மாற்றம் செய்து நகர் ஊரமைப்புதுணைஇயக்குநர் 62/2023 நாள் 17.02.2023 உத்தரவில் குடியிருப்பு பகுதியாக தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கி உத்திரவில் விதித்துள்ள நிபந்தனைப்படி பொதுஒதுக்கீடுகளான சாலை மற்றும் பூங்கா பொதுஉபயோக இடம் நகராட்சி வசம் நகராட்சி ஆணையர் பெயரில் பத்திரபதிவு செய்து ஒப்படைத்துள்ளார். பத்திரஆவண எண் 282/2023 நாள் 30.01.2023 மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.13,500 ரசீது எண்:10686 மனைப்பிரிவு விண்ணப்ப கட்டணம் ரூ.500 ரசீதுஎண்: 10687மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் ரூ.100 ரசீது எண்: 10688 வரைப்பட நகல் கட்டணம் ரூ.100 ரசீது எண்: 10689 கொடிநாள் ரூ.2000 ரசீது எண்: 10690 இவற்றை அனைத்தும் நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். இதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றத்தின் பார்வைக்கு<br>ந.க.எண்: 495/2022/எப்1 | தீர்மான எண்– 902, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்– 28.02.2023 |

பொருள் எண்-2

சீர்காழி நகராட்சியில் பொதுநிதிதிட்டம்- **2022-2023** –வடகிழக்கு பருவமழை 2022 (மழைக்காலத்தில்) JCB இயந்திரம், Oil Engine, ஆட்கள் மற்றும் மணல் மூட்டைகள் மற்றும் இதரபணிகள் மேற்கொள்ளுதல் செய்யும் பணிக்கு 12.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயர் | ஒப்பந்தமதிப்பீட்டைவிட |
|---|---|---|
| 1 | திருமதி.T.ஜீவா,ஒப்பந்ததாரா், சீா்காழி. | (-) 0.07%குறைவு |
| 2 | திரு.K.செல்வம்,ஒப்பந்ததாரா், சீா்காழி | (+) 3.55%அதிகம் |

**அலுவலககுறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வரப்பெற்றுள்ளஇரண்டுஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.(-)0.07%கொடுத்துள்ளதிருமதி.T.ஜீவா, ஒப்பந்ததாரா், சீா்காழி. அவா்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் பணி அவசர அவசியம் கருதி நகா்மன்ற தலைவாின் முன் அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கரிக்கலாம்.

ந.க.எண் : 1803/2022/இ1.

தீா்மான எண்– 903, மன்றம் அனுமதிக்கப்பட்டது.
நாள்– 28.02.2023

பொருள் எண்-3

சீா்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதியில்உருவாகும் திடகழிவுகள்மற்றும் மரக்கழிவுகளை JCB மற்றும் டிராக்டா் வாகனம் மூலம் ஒப்பந்தஅடிப்படையில் பயன்படுத்தி கழிவுகளை அப்புறப்படுத்தும் பணிக்கு 14.12.2022 அன்றுகீழ்க்கண்டவாறுஇரண்டுஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகளின் ஒப்பு நோக்குபட்டியல் மன்றத்தின் பாா்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரா் பெயா் முகவாி | ஒப்பந்தப்புள்ளிதொகை ரூ. |
|---|---|---|
| 1 | Agniveeran Earth Movers, T.Jeeva Contractor, No.1.Thenpathy,Sirkali-609110 | **JCP 1 Hour 1,200/-** **75.00 Hours** |
| 2 | Sri Earth Movers, 12,12 Pidari East Street, Sirkali - 609110 | **JCP 1 Hour1,300/-** **75.00 Hours** |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் வாிசைஎண்-1ல் குறிப்பிடப்பட்டுள்ள Agniveeran Earth Movers, Sirkali, என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்த புள்ளியை மன்றத்தின் பாா்வைக்கும் மன்றபொருள் ஒப்புதலுக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணிகள் மேற்கொள்ளவும் நகா்மன்றதலைவா் அவா்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

தீா்மான எண்– 904, மன்றம் அனுமதிக்கப்பட்டது.
நாள்– 28.02.2023

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.2701/2022/எச்1. | |
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக ( Garbage Free City ) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating)சுய உறுதிமொழி சான்றிதழுக்கு (Self Declaration) பெறுவதற்கு ஏதுவாக தினந்தந்தி மற்றும் (Trinity Mirror) ஆங்கிலம் நாளிதழில் 09.12.2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டுபட்டியல்தொகை ரூ.16800+ 9954 என்ற விகதத்தில் ரூ.26754/-க்கு பில்வரப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்நகர்மன்றதீர்மானஎண்:880 நாள்:28.12.2022–ன் படி ரூ.20,000/-க்கு மட்டுமே அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆகையால்கூடுதல் தொகை.ரூ.6754/-க்குநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>2. நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்: 499/2022/எச்1. | தீர்மான எண்–905, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்–28.02.2023 |
| பொருள் எண்-5 | சீர்காழிநகராட்சியில் காலைஉணவு திட்டம் தமிழ்நாடு சட்டபேரவை விதிகளில் விதி எண் 110–ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் படி இந்நகராட்சியில்உள்ள 7 துவக்கப்பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவமாணவியர்க்கு அனைத்து பள்ளிவேலை நாட்களிலும் காலை உணவு வழங்குதல் தொடர்பாக. இந்நகராட்சி வார்டு எண்: 8 தாடாளன்மேற்கு நகராட்சி தொடக்கப்பள்ளியில் ஒருங்கிணைந்த சமயற்கூடம் ரூ23.00 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு 16.09.2022 அன்று திறப்புவிழா (தமிழக அரசு அறிவிப்புகிணங்க) நடைப்பெறுவது தொடர்பாக. நடவானபந்தல், வாழைமரம், பேனர்கள், அலங்காரப்பொருட்கள், அலங்காரவண்ணவிளக்குகள்,மேஜை நாற்காலிகள், ஒளிஒலிஅமைப்புகள் ஆகியவைகளை அமைக்கும் பணிக்கு(வாடகைக்கு)ரூ.77,500/–த்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து நகர்மன்றதலைவரின்முன்அனுமதிபெற்று பணியின்அவசரம் அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று செலவீனத்தினை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** நகர்மன்றதலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br><br>ந.க.எண் : 1800/2022/இ1/1. | தீர்மான எண்–906, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்–28.02.2023 |
| பொருள் எண்-6 | சீர்காழிநகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய பேரூந்து நிலையத்தில் நிழற்குடை அருகாமையில் உள்ள இருக்கைகள் பழுந்தடைந்து உள்ளதால் போக்குவரத்து பயணிகள் அமர்ந்து பயணிக்கமிகவும் சிரமத்திற்குள்ளாவதாலும் மேற்படி நிலையத்தில் வணிக வளாக கடைகளின் நடைப்பாதைகள் பழுதடைந்து பொதுமக்கள் நடந்து செல்ல அவதிக்குள்ளாவதாலும் புதிய இருக்கைகள் கொள்முதல் செய்து பொருத்தும் பணிக்கும் நடைப்பாதை சீர்செய்யும் பணிக்கும் பொதுமக்களின் நலன் கருதி ரூ5.00 இலட்சத்தில் மதிப்பீடுகள் தயார் செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவீனத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்–907, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்–28.02.2023 |

<table>
<tr><td></td><td>ந.க.எண். 199/2023/இ1</td><td></td></tr>
</table>

<table>
<tr><td>பொருள் எண் -7</td><td>

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:5990/2022/SBM நாள்.11.04.2022 மற்றும் ந.க.எண்:18856/2022/தூஇதி2 நாள்: 13.07.2022 –ன் படி தூய்மை இந்தியாதிட்டம் 2.0 கீழ் சீர்காழி நகராட்சிப்பகுதியில் தனிநபர் வீட்டுக் கழிப்பிடங்கள், கட்டும் பணிகளுக்கு ஒப்புதல் அளித்து பணிகள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தனிநபர் வீட்டுக் கழிப்பிடங்கள் அமைக்கும் பணிக்குத் திட்ட மதிப்பீட்டுத் தொகையாக கீழ்கண்டவாறு மதிப்பிடு செய்யப்பட்டுள்ளது.

<table>
<tr><td>Target 2021-22</td><td>Estimated cost (Rs.30,000/ Unit) lakhs</td><td>Goi Share (Rs 4000/ Unit) lakhs</td><td>State Share (Rs 2666/Unit) lakhs</td><td>ULB Share (Rs 2666/Unit) lakhs</td></tr>
<tr><td>40 Nos</td><td>12.00</td><td>1.60</td><td>1.07</td><td>1.07</td></tr>
<tr><td>Target 2022-23</td><td>Estimated cost (Rs.30,000/ Unit) lakhs</td><td>Goi Share (Rs 4000/ Unit) lakhs</td><td>State Share (Rs 2667/Unit) lakhs</td><td>ULB Share (Rs 2667/Unit) lakhs</td></tr>
<tr><td>53 Nos</td><td>15.90</td><td>2.12</td><td>1.41</td><td>1.41</td></tr>
</table>

.

மேற்கண்டவாறு பங்கீடு செய்யப்பட்டுள்ள மொத்தம் 93 பயனாளிகளுக்கும் நகராட்சிப்பங்கு தொகை ரூ.2.48 இலட்சம் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிவழங்கலாம்.
2. நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று பணிகள்மேற்கொண்டதைமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2669/2021/எச்1

</td><td>தீர்மான எண்– 908, மன்றம் அனுமதிக்கப்பட்டது. நாள்– 28.02.2023</td></tr>
<tr><td>பொருள் எண் -8</td><td>

சீர்காழிநகராட்சியில் பொதுசுகாதாரபிரிவில் தனியார் மகளிர் சுய உதவி குழு மூலம் ஒப்பந்த அடிப்படையில் 80 தூய்மைபணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மைபணிகள் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் ஒப்பந்தபணிகாலம் 31.12.2022 வுடன் முடிவடையும் நிலையில் உள்ளது, எனவே திடக்கழிவு மேலாண்மைதிட்டத்தை திறம்படசெயல்படுத்தவும் குறிப்பாக தினத்தோறும் குடியிருப்புகளில் சேகரம்மாகும் திடக்கழிவுகளை மட்கும் மற்றும் மட்காதகுப்பைகளாக பிரித்து மட்கும் குப்பைகளைஉரமாக்க MCCயில் கொண்டு சேர்த்தல், மட்காத பிளாஸ்டிக் கழிவுகளைசிமென்ட் ஆலைக்கு அனுப்பி வைத்தல் மற்றும் நகரத்தின் பொதுசுகாதாரத்தை பாதுகாத்தல், போன்றபணிகளை தினசரி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட இப்பணிகளை தனியார் மகளிர்சுயஉதவிக் குழு மூலம் பணிபுரியும் 80 தூய்மை பணியாளர்களையும், மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதியஉத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலைவிகிதமான நாள் ஒன்றிர்கு ரூ.460/– என்றவிகிதத்தில் 01.01.2023 முதல் 31.01.2023 வரையிலான 1 மாதகாலத்திற்க்கு மட்டும் தூய்மைபணி மேற்கொள்ள "**அப்துல்கலாம்**"மற்றும் "**அரும்பு**" மகளிர் சுய உதவிகுழுகளுக்குபணிநீட்டிப்புசெய்திடவும், அதற்கான உத்தேச செலவினத்தொகையாக ரூ.11,40,800/–ற்கு நகராட்சிப் பொதுநிதியிலிருந்தும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டுக் கட்டணக் கணக்கிலிருந்தும் செலவினம் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** 1. மன்றம் அனுமதிவழங்கலாம்.
2. நகர் மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதைமன்றம் அனுமதிக்கலாம்.

</td><td>தீர்மான எண்– 909, மன்றம் அனுமதிக்கப்பட்டது. நாள்– 28.02.2023</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | ந.க.எண்: 2669/2021/எச்1 | |
| பொருள் எண்-9 | சீர்காழி நகராட்சியில் பொதுசுகாதாரபிரிவில் தனியார் மகளிர் சுய உதவிகுழு மூலம் ஒப்பந்த அடிப்படையில் 80 தூய்மைப் பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மேற்படிபணியாளர்களின் ஒப்பந்தபணிகாலம் 31.01.2023 வுடன் முடிவடையும் நிலையில் உள்ளது, எனவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை திறம்பட செயல்படுத்தவும் குறிப்பாக தினந்தோறும் குடியிருப்புகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை மட்கும் மற்றும் மட்காத குப்பைகளாக பிரித்து மட்கும் குப்பைகளை உரமாக்க MCCயில் கொண்டு சேர்த்தல், மட்காத பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி வைத்தல் மற்றும் நகரத்தின் பொதுசுகாதாரத்தை பாதுகாத்தல், போன்ற பணிகளை தினசரி மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br>எனவே மேற்கண்ட இப்பணிகளை தனியார் மகளிர்சுய உதவிக் குழு மூலம் பணிபுரியும் 80 தூய்மைப் பணியாளர்களையும், மாவட்டஆட்சித்தலைவர் மயிலாடுதுறைஅவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதியஉத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலைவிகிதமான நாள் ஒன்றிற்கு ரூ.460/– என்ற விகிதத்தில் 01.02.2023 முதல் 31.03.2023 வரையிலான 2 மாதகாலத்திற்க்கு மட்டும் தூய்மைப் பணிமேற்கொள்ள "**அப்துல்கலாம்**"மற்றும் "**அரும்பு**" மகளிர் சுய உதவிகுழுகளுக்கு பணிநீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேச செலவினத்தொகையாக ரூ.22,08,000/–ற்கு நகராட்சிப் பொதுநிதியிலிருந்தும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டுக் கட்டணக் கணக்கிலிருந்தும் செலவினம் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>2 .நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதைமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்: 2669/2021/எச்1 | தீர்மான எண்– 910, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்– 28.02.2023 |
| பொருள் எண்-10 | சீர்காழி நகராட்சி குட்பட்டபகுதிகளில் வடகிழக்கு பருவமழைக்காலம் ஆரம்பித்து உள்ளநிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர், மற்றும் மாவட்ட சுகாதார நலப்பணிகள் இணைஇயக்குநர் மயிலாடுதுறை ஆகிய உயர் அலுவலர்களுக்கு தினந்தோறும் தற்காலிகDBC பணியாளர்களால் கொசுபுழுக்கள் அழித்தல், முதிர் கொசுக்களை அழித்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் DBC (Domestic Breeding Checkers) பணியாளர்கள்மற்றும் பணியின் விவரத்தை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து தெரிவிக்க வேண்டியுள்ளது.<br>மேலும் நகரின் பொதுமக்கள், தன்னார்வதொண்டு நிறுவன பிரதிநிதிகள், மக்கள்பிரதிநிதிகள் மூலம் பெறப்படும் புகார்களின் மீது நடவடிக்கைமேற்கொள்ளவும், தமிழக அரசின் உத்திரவுப்படி கொரோனா தடுப்பூசி போடப்படும் காலங்களில் DBC பணியாளர்களின் பங்கு முக்கியதுவம் என்பதாலும், மழைக்காலங்களில் ஏற்படும் காய்ச்சல் கண்ட வீடுகளுக்கு சென்று தகவல் சேகரித்தல், மற்றும் 6 Day Block என்ற சுழற்ச்சி முறையில் குடியிருப்பு பகுதிகளுக்கு சென்று தண்ணீரில் உள்ள கொசுப் புழுக்களை அழித்தல், தேவையான நேரங்களில் நிலவேம்பு கசாயம் வழங்குதல் போன்ற அத்தியாவசிய பணிகளில் பணியாளர்களை பயன்படுத்த வேண்டியுள்ளது அவசியமாகிறது.<br>எனவே மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதியஉத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலைவிகிதமான நாள் ஒன்றுக்கு ரூ.460/– என்ற விகிதத்தில் இவ்வலுவலக ந.க.எண்.2187/2019/எச்.1 நாள்: 06.08.2020 செயல்முறைஆணையின் படி | தீர்மான எண்– 911, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்– 28.02.2023 |

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சியில்மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 31.12.2022 ஆம் தேதியுடன் முடிவடைவதால், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2571/2017/J1 நாள்:23.04.2018 ல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோலின்படி, மேலும் 1 மாதகாலத்திற்கு 32DBCபணியாளர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில், 01.01.2023 முதல் 31.01.2023 வரையிலானகாலத்திற்கு ''அன்னைமகளிர் சுய உதவிக்குழுவின்'' மூலம் பணிக்கு அமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் தொகை ரூ.4,56,320/–ற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு: :1.** மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>2. நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றுபணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்: 2612/2020/எச்1. | |
| பொருள் எண்-11 | சீர்காழி நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர். தஞ்சாவூர் மற்றும் மாவட்ட சுகாதாரநலப்பணிகள் இணைஇயக்குநர் மயிலாடுதுறை ஆகிய உயர் அலுவலர்களுக்கு தினந்தோறும் தற்காலிகDBC பணியாளர்களால்கொசுபுழுக்கள்அழித்தல், முதிர் கொசுக்களை அழித்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் DBC (Domestic Breeding Checkers) பணியாளர்கள் மற்றும் பணியின் விவரத்தைஉரியபடிவத்தில் பூர்த்தி செய்துதெரிவிக்கவேண்டியுள்ளது.<br>மேலும் நகரின் பொதுமக்கள், தன்னார்வதொண்டுநிறுவனபிரதிநிதிகள், மக்கள்பிரதிநிதிகள் மூலம் பெறப்படும் புகார்களின் மீது நடவடிக்கைமேற்கொள்ளவும், தமிழகஅரசின் உத்திரவுப்படி கொரோனா தடுப்பூசி போடப்படும் காலங்களில் DBC பணியாளர்களின் பங்கு முக்கியதுவம் என்பதாலும், மழைக்காலங்களில் ஏற்படும் காய்ச்சல்கண்ட வீடுகளுக்கு சென்று தகவல் சேகரித்தல், மற்றும் 6 Day Block என்ற சுழற்ச்சி முறையில்குடியிருப்புபகுதிகளுக்குசென்று தண்ணீரில் உள்ளகொசுப் புழுக்களைஅழித்தல், தேவையான நேரங்களில் நிலவேம்பு கசாயம் வழங்குதல் போன்ற அத்தியாவசிய பணிகளில் பணியாளர்களை பயன்படுத்த வேண்டியுள்ளது அவசியமாகிறது.<br>எனவே மாவட்டஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதிய உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலைவிகிதமான நாள்ஒன்றுக்கு ரூ.460/– என்ற விகிதத்தில் இவ்வலுவலக ந.க.எண்.2187/2019/எச்.1 நாள்: 06.08.2020 செயல்முறை ஆணையின் படி இந்நகராட்சியில்மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 31.01.2023 ஆம் தேதியுடன் முடிவடைவதால், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2571/2017/J1 நாள்:23.04.2018ல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோலின்படி, மேலும் 3 மாதகாலத்திற்கு 32 DBCபணியாளர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில், 01.02.2023 முதல் 30.04.2023 வரையிலான காலத்திற்கு | தீர்மான எண்– 912, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்– 28.02.2023 |

| | | |
|---|---|---|
| | "அன்னைமகளிர் சுய உதவிக்குழுவின்" மூலம் பணிக்குஅமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் தொகை ரூ.13,24,800/–ற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளமன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>2. நகர் மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2612/2020/எச்1 | |
| பொருள் எண் -12 | சீர்காழி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தும் வாகனத்தை இயக்குவதற்கு ஒப்பந்தஅடிப்படையில் 3 ஒட்டுநர்கள் (Supply of Man Power) ஆகியோரது, பணிக்காலம் 31.12.2022 ஆம் தேதியுடன் முடிவடைவதால், பணியின் முக்கியதுவம் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதிய உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள, விலை விகிதமான நாள் ஒன்றுக்கு ரூ.560/–வீதம் 1 மாதகால அவகாசத்திற்கு பணிநீடிப்பு செய்ததுகொள்ளவும். உத்தேசசெலவினதொகை ரூ.52,080/–க்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில், 01.01.2023 முதல் 31.01.2023 வரையிலானகாலத்திற்கு "ஸ்ரீ பைரவர் மகளிர் சுய உதவிக்குழுவின்" மூலம் பணிக்குஅமர்த்தி பணிகள்மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>2. நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2670/2020/எச்.1. | தீர்மான எண்– 913, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்– 28.02.2023 |
| பொருள் எண் -13 | சீர்காழி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தும் வாகனத்தை இயக்குவதற்கு ஒப்பந்தஅடிப்படையில் 3 ஒட்டுநர்கள் (Supply of Man Power) ஆகியோரது, பணிக்காலம் 31.01.2023 ஆம் தேதியுடன் முடிவடைவதால், பணியின் முக்கியதுவம் கருதிமாவட்டஆட்சித்தலைவர் மயிலாடுதுறைஅவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதியஉத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள, விலை விகிதமானநாள் ஒன்றுக்கு ரூ.560/–வீதம் 2 மாதகால அவகாசத்திற்கு பணிநீட்டிப்புசெய்து கொள்ளவும். உத்தேசசெலவின தொகை ரூ.1,00,800/–க்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளதற்காலிகமாக தினக்கூலிஅடிப்படையில், 01.02.2023 முதல் 31.03.2023 வரையிலானகாலத்திற்கு"ஸ்ரீ பைரவர் மகளிர் சுய உதவிக்குழுவின்" மூலம் பணிக்கு அமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>2. நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றுபணிகள் . மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2670/2020/எச்.1 | தீர்மான எண்– 914, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்– 28.02.2023 |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-14 | தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதிகளில் விதி எண்:110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புபடி இந்நகராட்சி 7 துவக்கப்பள்ளிகளிலும் 1 முதல் 5 ஆம் வகுப்புவரைபயிலும் மாணவமாணவியர்க்கு அனைத்துபள்ளிநாட்களிலும் காலைஉணவுவழங்குதல் தொடர்பாக, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச ந 4–1) துறைஅரசாணை (நிலை) எண் 43 நாள் 27.07.2022–ன் படி இந்நகராட்சி வார்டு எண் 08 தாடாளன் மேற்குநகராட்சி தொடக்கப்பள்ளியில் மேற்கண்ட 7 துவக்கப்பள்ளிமாணவமாணவியர்க்கு காலைசிற்றுண்டி வழங்கிடவேண்டி ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிடம்(ஒருங்கிணைந்தசமையற்கூடம்) கட்டப்பட்டு 15.09.2022 அன்று திறப்புவிழா நடைப்பெற்றது. மேலும் இக்கட்டிடத்தில் தரைத்தளத்தில் பேவர்பிளாக்,அலுமினியம் பேனல்கள், நவீனகழிவறை, மரக்கதவு,பிவிசிகதவு,1000 கொள்ளளவு கொண்ட பிவிசிவாட்டர்கேன், M20 கான்கீரட்தளம், ரெடிமேட் கான்கீரெட்சுவர், LED LIGHTS, 300MM (Borewell), மற்றும் மின்விசிறிகள் அமைக்கப்பட்டுள்ளசெலவீனம் ரூ.6.52 இலட்சத்திற்கு நகராட்சிகல்விநிதியிலிருந்துசெலவீனம் மேற்கொள்ளமன்றத்தின் அனுமதிக்குவேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** நகர்மன்ற தலைவர் முன் அனுமதிபெற்று நடவடிக்கை மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் : 1800/2022/இ1/அ1 | தீர்மான எண்–915, மன்றம் அனுமதிக்கப்பட்டது. நாள்–28.02.2023 |
| பொருள் எண்-15 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான கொள்ளிடம் சித்தமல்லிதலைமை நீரேற்றம்நிலையத்தில் இருந்து இந்நகராட்சி பொதுமக்களுக்கு தினந்தோறும் 2 மணிநேரம்அளவில் குடிநீர் விநியோகம் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. கொள்ளிடம் ஆற்றுப்படுகையில் கடந்த 18.07.2022 அன்றுஏற்பட்ட வெள்ள பெருக்கால் சித்தமல்லி தலைமை நீரேற்றம் நிலையத்தில் உள்ளஆழ்துளை கிணறுகள் பழுதடைந்துதற்போது குடிநீர் கலங்களாக (நிறம்மாறி) வருகின்றது. இதனால் இந்நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் போதுசுகாதாரம் தொடர்பான (நோய் தொற்றுக்கள்) எழவாய்ப்புகள் அதிகம் உள்ளபடியாலும், மேலும் வடக்கிழக்கு பருவமழை 2022 வழுபெறஇருப்பதால் தற்போதுசித்தமல்லியில் உள்ள கிணறுகளைதுர்வாரும் பணிநடைப்பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதால் பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திடவேண்டிபொதுமக்களின் நலன்கருதிஇந்நகராட்சிஅலுவலகத்தின் மேல்நீர்தேக்கதொட்டியின் கீழ் ரூ.1.63 இலட்சத்தில் நகர்மன்றதலைவரின் முன் அனுமதிபெற்றுபுதிய சிறு ஆழ்துளைகிணறு(Borewel)அமைக்கும் பணிக்குபணியின் அவசரம் அவசியம் கருதிமேற்படிபணியினைதமிழ்நாடுநகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நகராட்சிகுடிநீர் நிதியிலிருந்துசெலவீனம் மேற்கொண்டதனைமன்றத்தின் பார்வைக்குவைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்–916, மன்றம் அனுமதிக்கப்பட்டது. நாள்–28.02.2023 |

<table>
<tr><td></td><td>ந.க.எண்:3232/2022/இ1</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்-16</td><td>சீர்காழி நகராட்சியில் குடிநீர்நிதி- 2023-2024-இன் கீழ் ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி அலுலவலக வளாகம் கோவில்பத்து துறையூர் பனமங்கலம் வ ஊ சி நகர் ஆகியபகுதிகளில் ( குடிநீர் விநியோகம் ) மோட்டார் இயக்குதல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை வழங்குவதற்கு நகர்மன்ற தீர்மான எண்.889 28.12.2022 நாள்-ன்படி10.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவிவரப்படிவரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிப்படி பெறப்பட்டது<br>.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தமதிப்பீட்டைவிட ரூ( இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.T.ஜீவா,ஒப்பந்ததாரர் திருமஞ்சனவீதி,சீர்காழி.</td><td>(-) 637020.00 குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.செல்வம்,ஒப்பந்ததாரர், ஊழியங்காரன்தோப்பு,சீர்காழி</td><td>(+) 638595.00அதிகம்</td></tr>
</table>
அலுவலககுறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ரூ(-) 637020.00 குறைவாக கொடுத்துள்ள திருமதி.T.ஜீவா, ஒப்பந்ததாரர், சீர்காழி. அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிபெற்று 10.01.2023 அன்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும்<br>
வைக்கப்படுகிறது. நகர்மன்றதலைவரின் முன்அனுமதி பெற்று வழங்கியதனை மன்றம் ஏற்கலாம்<br><br>
ந.க.எண்-568/2022/இ1</td><td>தீர்மான எண்–917, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்–<br>28.02.2023</td></tr>
<tr><td>பொருள் எண்-17</td><td>சீர்காழிநகராட்சி சொந்தமான அலுவலகட்டிட வளாகத்தில் உள்ள 12 இலட்சம் கொள்ளவுக்கொண்ட மேல்நீர்தேக்கத்தொட்டியினை தாங்கியுள்ள 30 எண்ணிக்கையிலான தூண்கள் மிகவும் பழுதாகியுள்ளதால் அவைகளை சரிசெய்வது அவசியமாகிறது. பொதுமக்களின் குடிநீர் தேவையின் அவரம் அவசியத்தினை கருத்தில் கொண்டு அதனை பழுதுநீக்கம் செய்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ரூ5.00 இலட்சத்தில் மதிப்பீடுதயார் செய்துநடவடிக்கைகளைமேற்கொள்ளவும் இச்செலவீனத்தினை நகராட்சிகுடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் ஏற்கலாம்.<br><br>
ந.க.எண் 357 /2023/இ1</td><td>தீர்மான எண்–918, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்–<br>28.02.2023</td></tr>
<tr><td>பொருள் எண்-18</td><td>சீர்காழி நகரம் வார்டுஅ பிளாக் 53 நகரஅளவு எண் 6 இல்பட்டாவேண்டி திரு. ராஜாராமன் விண்ணப்பித்துள்ளார், இவ்விண்ணப்பத்தை நகரசார்ஆய்வாளர் அவர்களின் விரிவான குறிப்பின்படி, நகரமைப்பு ஆய்வாளர் ஸ்தல ஆய்வு செய்து நகர ஆவணங்களை பரிசீலனை</td><td>தீர்மான எண்–919, மன்றம் அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டதில் நகரளவை எண்,6–ல் பன்னீர்செல்வம் தெருஎன்றுபதிவாகி உள்ளது என்பதும், மேற்படி மனுதாரர் கூரைவீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இப்பொருள்மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் .48/2023/எப்1 | நாள்–<br>28.02.2023 |
| பொருள் எண் -19 | சீர்காழிநகராட்சிஅலுவலககட்டிடத்தில் பொதுசுகாதாரப்பிரிவு,நகரமைப்பு பிரிவு,பொறியியல் பிரிவு ஆகியவற்றில் உள்ளகழிவறைகளை பராமரித்தல் மின்சாரவசதிகள் மின்சாதன உபகரணங்கள் பழுதுநீக்கம் பணிஆணையாளர் அறைகாசாளர் அறை அலுமினியம் கதவுகளை சரிசெய்யும் பணிமற்றும் பழைய ஆதார் மையத்தினை புதுபித்து அங்கு புதிய வரிவசூல் மையம் அமைக்கும் பணிக்கானமதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் தயார் செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இச்செலவீனத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம.<br>ந.க.எண்.358/2022/இ1 | தீர்மான எண்–920, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்–<br>28.02.2023 |
| பொருள் எண் -20 | இந்நகராட்சியின் வார்டு எண்.4, ஈசானியதெருவில் உள்ளசுடுகாட்டில் நவீனஎரிவாயு தகனமேடைஅமைக்கும் பணிக்குஒப்பந்தபுள்ளி 17.02.2012இல் கோரப்பட்டு, General Enviro Tech(P) Ltd நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி நகரமன்ற தீர்மான எண்.106 நாள்.29.03.2012-இல் மற்றும் இவ்வலுவலக கடிதம் எண்.6144/2011/இ1 நாள் 02.04.2012இல் ஒப்பந்தபுள்ளி ஏற்கப்பட்டது. மேற்படி பணிகள் முடிக்கப்பட்டு நவீன எரிவாயு தகன மேடைபயன்பாட்டில் உள்ளது. இப்பணிக்கு செலுத்திய Deposit &Withheld தொகையினை திரும்ப வழங்கிட கோரி மேற்படி நிறுவனம் சிறுநிறுவனங்களுக்கான நீதிமன்றத்தில் (Micro & Small Enterprises Facilitation Council) வழக்குஎண்.195/2022இல் தமக்கு வழங்க வேண்டியவைப்பு தொகை ரூ.331151 மற்றும் அதற்கான வட்டிதொகை ரூ.2970132 ஆககூடுதல் ரூ.3301283 இல் காணொளி வாயிலாக நடைபெற்றது. மனுதாரரின் வைப்பு தொகையினை திரும்ப அளித்திட தெரிவிக்கப்பட்டது. எனவே General Enviro Tech(P) Ltd., இந்நகராட்சியின் தொடர்புடையஆவணங்கள் அடிப்படையில் திரும்ப வழங்க வேண்டிய வைப்பு தொகை ரூ.399633 – ஐ திரும்பவழங்கிட மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>நீதிமன்றநடவடிக்கைமற்றும் நகராட்சியின் நிதியிழப்பு ஆகியவற்றினை தவிர்க்கும் பொருட்டுஅவசரஅவசியம் கருதிநகரமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு தொகையினை திரும்ப | தீர்மான எண்–921, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்–<br>28.02.2023 |

| | | |
|---|---|---|
| | வழங்கி அதன் விவரத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதைமன்றம் ஏற்கலாம்.<br><br>ந.க.எண்.3000/2021/இ1 | |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-21 | சீர்காழிநகராட்சியில் தூய்மைபாரதம் திட்டத்தின் கீழ்திறந்தவெளியில்மலம் கழித்தலற்ற நகராட்சியா கமத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு அத்தகைய நிலை கடைபிடிக்கப்பட்டுவருகிறது. அதன் தொடர்ச்சியாக திறந்த வெளிமலம் , சிறுநீர் கழித்தலற்ற நகராட்சியாக ( ODF ++) சான்று பெறுவதற்கு நகராட்சிபல் வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக ,நகராட்சிபகுதியில் திறந்த வெளியில்மலம் கழித்தலற்றநிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. என்ற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு ( Self Decleration) பெறஏதோ ஒருதினசரி நாளிதழில் விளம்பரம் செய்திட உத்தேச செலவினம் தொகைரூ.20,000/– நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றப்பொருள் அனுமதிவேண்டப்படுகிறது<br><br>**அலுவலககுறிப்பு**:1. மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>2. நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்:499/2022/ எச்1 | தீர்மான எண்–922, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்–28.02.2023 |
| பொருள் எண்-22 | சீர்காழி நகராட்சி வடகிழக்குபருவமழை 2022 மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுலுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி பாதுகாப்பு மையத்தில் தங்கவைக்கப்பட்ட பொதுமக்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்கிட ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்-1325/2022/இ1 ன்படிமளிகைபெருட்கள், காய்கறிமற்றும் வாடகைசமையல் பாத்திரம் வாங்கி பயன்படுத்தப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.94,979/- ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்- 1325/2022/அ1/1. | தீர்மான எண்–923, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்–28.02.2023 |
| பொருள் எண்-23 | சீர்காழிநகராட்சிஅலுவலகபயன்பாட்டிலுள்ளமின்னாக்கி (ஜெனரேட்டர்) கொள்முதல் செய்து 10ஆண்டுகளுக்கு மேல் கடந்தப் படியால் அடிக்கடி பழுது ஏற்பட்டு மின்சார வாரியத்தினால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் போது உடனடியாக மின்னாக்கியினை இயக்கமுடியாத நிலையில் உள்ளது.மேற்படிமின்னாக்கியினைபழுதுநீக்கம் செய்திட ஆகும் செலவீனம் ரூ 15897–க்கு பணியின் அவசரம் அவசியம் கருதிதமிழ்நாடுநகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நகர்மன்றத்தலைவரின் அனுமதி பெற்று நகராட்சி | தீர்மான எண்–924, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்–28.02.2023 |

<table>
<tr><td></td><td>பொதுநிதியிலிருந்து செலவீனத்தினை மேற்கொண்டதனை மன்றத்தின் பார்வைக்குவைக்கப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு** : பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அனுமதி பெற்று செலவீனம் மேற்கொண்டதனை மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண் 432/2023/இ1</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்-24</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தொகுதி – A பிளாக் –34, கதவு எண்.12 B , புதிய எண் 39/4 தியாகி சாமிநாத செட்டி தெருவில் உள்ள திரு. S.P. திருப்பதி என்பவருக்கு சொந்தமான ஆர்.சி.சி கட்டிடம் 5.2.2023 அன்று அதிகாலை தீக்கிறையானது. இதனை தொடர்ந்து மிகவும் சிதிலமடைந்து பாதுகாப்பின்றி பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ள இக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த உரிய அறிவிப்பு இந்நகராட்சி அறிவிப்பின் மூலம் கட்டிட உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டது.<br>மேலும், திரு.திருஞானசம்பந்தமூர்த்தி என்பவர் மேற்கண்ட சொத்து தனது அனுபவத்தில் உள்ளதாகவும் முத்தையா செட்டியார் குமாரர்கள் தான் அனுபவிக்கும் சொத்தை அனுபவிப்பதற்கு எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளதாலும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி திரு,திருப்பதி என்பவர் பெயரில் உள்ளதாலும் அறிவிப்பை அவரது பெயரிலேயே வழங்குமாறு கோரியதன்படி 7.2.2023 அன்று திருத்திய அறிவிப்பு இக்கட்டிடத்தில் ஒட்டி சார்வு செய்யப்பட்டது அதில் 24 மணி நேரத்தில் பொதுமக்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாதவாறு கட்டிடத்தை இடித்து அப்புறபடுத்த அறிவுறுத்தப்பட்டது. மேலும் , அபாயகரமான இக்கட்டிடத்தினால் உயிர் சேதமோ/ பொருள் சேதமோ ஏற்படின் அதற்கு தாங்களே முழு பொறுப்பாவீர்கள் என அறிவுறுத்தப்பட்டது.<br>இந்நிலையில் 13.02.2023 மாலை 5 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற சட்டம் மற்றும் ஒழுங்கு (L&O) ஆய்வு கூட்டத்தில் காலல் துறையால் கொண்டுவரப்பட்ட இப்பொருள் குறித்து மாவட்ட வருவாய் அலுவலர்,வருவாய் கோட்டாட்சியர், நகராட்சி ஆணையர் சீர்காழி, வருவாய் வட்டாட்சியர், காவல் கண்காணிப்பு ஆய்வாளர் அவர்கள் முன்னிலையில் பொதுமக்களின் உயிர்சேதத்தை கருத்தில் கொண்டு இக்கட்டிடத்தை உடனடியாக இடித்து அகற்ற நகராட்சி ஆணையர் சீர்காழி அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆணையிட்டுள்ளதை தொடர்ந்து இக்கட்டிடத்தை நகராட்சி மூலம் இடித்து அப்புறப்படுத்த வேண்டும் இதற்கான செலவீனத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இதனை ஈடுசெய்யும் வகையில் செலவினத்தை கட்டிட உரிமையாளரிடமிருந்து பின்னர் பெற்று கொள்ளவும் நகர்மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்: 7778/2017/எப்1</td><td>தீர்மான எண்– 925, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்– 28.02.2023</td></tr>
<tr><td>பொருள் எண்-25</td><td>பொதுசுகாதாரப்பிரிவில் 2023-2024 ஆம் ஆண்டில் கீழ்கண்டுள்ள இனங்களுக்கு ஆகும் உத்தேச செலவீனத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><table><tr><td>வ.எண்</td><td>செலவீனம் விபரம்</td><td>உத்தேச செலவீனத் தொகை இலட்சத்தில்</td></tr><tr><td>1</td><td>திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள தூய்மைபணியாளர்களுக்கு வாங்கி வழங்க வேண்டிய தளவாட சாமான்கள்.</td><td>5.00</td></tr><tr><td>2</td><td>திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களுக்கும் அரசின் உத்திரவின் படி செலுத்தப்பட வேண்டிய சாலைவரி, இன்சூரன்ஸ், பசுமைவரி, தகுதி சான்று கட்டணம் உள்ளிட்ட அனைத்து வரிகளும்</td><td>2.00</td></tr></table></td><td>தீர்மான எண்– 926, மன்றம் அனுமதிக்கப்பட்டது.<br>நாள்– 28.02.2023</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | செலுத்துவதற்கு. | |
| 3 | திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு பழுது நீக்கம் செய்து FC தகுதி சான்று பெறுதல். | 4.00 |
| 4 | விற்பனை செய்ய இயலாத பிளஸ்டிக் கழிவுகளை பேலிங் செய்வதற்கு தேவையான (ROPE) ரோப் மற்றும் கிளிப்புகள் தேவைப்படுவதால் ஓராண்டிற்கு தேவையானவற்றை அவ்வப்போது வாங்கி பயன்படுத்திக் கொள்வதற்கு. | 0.50 |
| 5 | பொதுசுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் சம்மந்தமாக பொதுமக்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளதால் ஆட்டோவில் மைக் விளம்பரம் செய்தல் மற்றும் தேவைக்கேற்ப விழிப்புணர்வு விளம்பரப் பதாகைகள் மற்றும் பிட் நோட்டீஸ்கள் அடிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்வதற்கு. | 1.00 |
| 6 | நுண்ணுயிர் உரம் மையத்தில் (MCC) மட்கும் குப்பைகளை கொண்டு இயற்கை உரம் தயாரிக்க தேவையான மூலப் பொருளான EM Solution மற்றும் உம்மி,தவிடு, வெல்லம் கொள்முதல் செய்ய. | 1.00 |
| 7 | கொசு புழுக்கள் ஒழித்தல் மற்றும் முதிர்கொசுகளை கட்டுப்படுத்த தேவைப்படும் அபேட் மருந்து மற்றும் பைரித்திரம், பேக்டிசைடு, கொள்முதல் செய்ய | 2.00 |
| 8 | பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, பினாயில் உள்ளிட்டவைகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் நேரடியாக பெற்றுக்கொள்ளுதல். | 4.00 |
| 9 | தூய்மைப்பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்களுக்கு பண்டிகை காலங்களில் ஆண்டுக்கு ஒரு முறை வழங்கப்படும் சீருடைகள் மற்றும் தையற்கூலி வழங்க தூய்மைப்பணியாளர்களுக்கு காலணிகள் மற்றும் ஒளிரூட்டும் ஜாக்கெட்டுகள் (Reflected Jacket) வாங்கி வழங்குதல். | 1.50 |
| 10 | சீர்காழி நகராட்சியில் தூய்மைபாரதம் திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு அத்தகைய நிலை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக திறந்த வெளிமலம், சிறுநீர் கழித்தலற்ற நகராட்சியாக (ODF+) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, நகராட்சி பகுதியில் திறந்தவெளியில் மலம்கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு ( ODF+) சான்று பெறுவதற்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வது. | 0.20 |

மேற்கண்ட இனங்களுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்: 2845/2022/எச்1

இடம்–சீர்காழி

ஆர். துர்க்கா பரமேஸ்வரி MBA.
(ஓம்) நகர்மன்றதலைவர்,
சீர்காழி நகராட்சி.

நாள்–28.02.2023